# திருநெல்வேலி மாவட்டம் – வீரவநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

நக.எண்.238 /2022/அ1 நாள்.24 .06.2022

திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் மின்கலன் மூலம் இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்திட தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் வீரவநல்லூர் பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 12.07.2022 பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மீது எந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், ஒப்பந்தப்புள்ளி தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 12.07.2022 மாலை 3.30 மணிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். மேற்படி வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விலை, வைப்புத் தொகை ஆகியவை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதை "செயல் அலுவலர், வீரவநல்லூர் பேரூராட்சி" என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை எடுத்து ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்துக் கொள்ளலாம்.

### கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-2022

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி நமூனா விலை ரூ. | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | மின் கலன் மூலம் இயங்கும் வாகனங்கள் 10 கொள்முதல் செய்தல் | 20.00 | 20000 | 8480 | 90 நாட்கள் |

1. ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பமுள்ளவர்கள் http://tntenders.gov.in, http://tenders.gov.in என்ற இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி நமூனா நகல் பதிவிறக்கம் செய்தும், உரிய கட்டணத்தை பேரூராட்சியில் செலுத்தியும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்குட்பட்டது.

24/6/2022

செயல் அலுவலர்,
வீரவநல்லூர் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

24/6/22